# சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 24/2021

நாள் 18.11.2025

DW1 – மோகன்குமார்

த/பெ – பொங்கியண்ண கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of November 2025)**

**குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கில் 2–ம் பிரதிவாதி. 3–ம் பிரதிவாதி எனது மாமியார். வாதிகளுக்கும், 2,3 பிரதிதவாதிகளான எங்களும் இடையே கடன் வரவு செலவு எதுவும் இல்லை என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. 1–ம் பிரதிவாதி தாவா சொத்தைப் பொறுத்து எனக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்த பிறகு தான் தாவா சொத்து பற்றிய விபரம் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். வாதிகள் 1–ம் பிரதிவாதியிடம் கடனாக ரூ.6,00,000/–ஐ பெற்றுக்கொண்டு தான் அதற்கு ஆதரவாக 23.12.2015–ம் தேதியிட்ட பதிவு கிரைய பத்திரம் வா.சா.ஆ.1–ஐ 1–ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்தார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகளுக்கும், 1–ம் பிரதிவாதிக்கும் இடையே 2015–ம் வருடம் கிரைய ஆவணம் ஏற்படுத்துவற்கு பேசப்பட்ட விபரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதிகளுக்கு போதிய படிப்பறிவு இல்லை என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1–ல் 1,2 வாதிகள் கைரேகை தான் செய்துள்ளார்கள் என்றால் சரிதான், 3,4 வாதிகள் கையொப்பம் செய்துள்ளார்கள். வாதிகள் வாங்கிய கடனுக்கு ஆதரவாக எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தின் பேரில் 1–ம் பிரதிவாதி எனது

பெயரிலும், 3–ம் பிரதிவாதி பெயரிலும் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 கிரைய ஆவணங்களை பெயரளவில் ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

2. நான் கிரையம் பெறும்போது சொத்து சம்பந்தமான முன் ஆவணங்கள், வில்லங்கம் போன்றவைகளை பார்த்து தான் கிரையம் பெற்றேன். நான் சொல்வது போல முன் ஆவணம் மற்றும் வில்லங்கம் பார்க்கவில்லை என்றும், அவ்வாறு நான் பார்த்திருந்தால் அந்த ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. 1–ம் பிரதிவாதியிடம் எனது பெயரில் கிரைய ஆவணம் எழுதி பெறுவதற்கு முன்பாக தாவா சொத்து எங்கு உள்ளது என்ற விபரம்  எனக்கு ஏற்கனவே சொத்து உள்ள இடம் தெரியும். நாங்கள் 1–ம் பிரதிவாதி மூலம் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 கிரைய ஆவணங்களை ஏற்படுத்தி கொண்டிருந்தாலும் சொத்தின் சுவாதீனம் வாதிகள் வசம் தான் இருந்தது என்றால் சரியல்ல, எங்களுடைய சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது. அவ்வாறு தாவா சொத்து எங்களது சுவாதீன அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்பதை காட்ட அடங்கல் கணக்கு, கந்தாய ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு எங்கள் பெயரில் பட்டா வழங்குவதற்கு முன்பாக சொத்தின் சுவாதீனம் வாதிகள் வசம் உள்ளதை விசாரிக்காமல் எங்கள் பெயரில் எங்களது செல்வாக்கை பயன்படுத்தி தவறாக பட்டா வழங்கி விட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. 4–ம் வாதியும், 1–ம் பிரதிவாதியும் கடனுக்கு தான் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை ஏற்படுத்தப்பட்டது என்பது குறித்த உரையாடல் அடங்கிய சிடி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளதை மறுப்பு எதுவும் எங்கள் தரப்பில் தெரிவிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. மேற்படி வீதம் கடனுக்காக தான் வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் 1–ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தப்பட்டது என்ற விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், இருந்தும் இந்த வழக்கிற்காக வேண்டி எனக்கு தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் 1–ம் பிரதிவாதியிடம் வாங்கிய கடன் தொகையை திருப்பிக்கொடுக்க தயாராக இருந்தும் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தின் மீது ஆசை கொண்டு எங்களது இருவர் பெயரிலும் நிபமான கிரைய ஆவணங்களை ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகளான எங்கள் மூவர் மீதும் தமிழக முதலமைச்சர் தனிப்பிரிவில் புகார் கொடுத்து அந்த புகாரின் பேரில் சேவூர் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணையில் மோசடியாக கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொண்டதாகவும், சொத்தின் சுவாதீனம் வாதிகள் வசமே இருப்பதாகவும் வாதிகள் தரப்பில் சொன்னதின் பேரில் போலீசார் சொத்தை நேரில் வந்து பார்த்து விட்டு பின்பு நீதின்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருப்பதால் நீதிமன்றம் மூலம் பார்த்து கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள்.

3. மேற்படி வீதம் போலீசார் விசாரித்தது குறித்து எங்களது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாதிகள் வாங்கிய கடனுக்கு 1–ம் பிரதிவாதியிடம் முறையாக 2020–ம் ஆண்டு வரையில் வட்டியை செலுத்தி வந்தார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக எங்களுக்கு சட்ட அறிவிப்பை அனுப்பினார்கள் என்றால் சரிதான். அந்த சட்ட அறிவிப்பில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்று நாங்கள் ஏற்றுக்கொண்டதால் தான் அதற்கு பதில் அறிவிப்பு

எதுவும் நாங்கள் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அந்த சட்ட அறிவிப்பை நாங்கள் பெற்றுக்கொண்ட பிறகு வாதிகளை சந்தித்து கேட்டதாகவும், அதற்கு வாதிகள் அந்த சட்ட அறிவிப்பின் பேரில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க மாட்டேன் என்று சொன்னதாகவும் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில் அவ்வாறு எந்த தேதியில், யார் முன்னிலையில் வாதிகளை சந்தித்து விபரம் கேட்டேன் என்றால் தேதி, மாதம், வருடம் எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் 2020–ம் ஆண்டில் சந்தித்து கேட்டோம். நான் சொல்வது போல வாதிகளை நாங்கள் சந்திக்கவும் இல்லை, அவர்களிடம் எதுவும் நாங்கள் பேசியதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை நான் அனுபவித்து வருகிறேன் என்பதை காட்ட வேளாண் துறையில் விவசாய அட்டை ஏதேனும் பெற்றுள்ளேனா? என்றால் இல்லை, வருவாய் ஆவணங்கள் தான் உள்ளது. வாதிகள் அனுப்பிய சட்ட அறிவிப்பில் 1–ம் பிரதிவாதி பெயரில் கடனுக்கு ஆதரவாக தான் வாதிகள் வா.சா.ஆ.1–ஐ எழுதி கொடுத்துள்ளதாகவும், அதனைத்தொடர்ந்து 1–ம் பிரதிவாதி மூலம் எங்கள் பெயரில் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 கிரைய ஆவணங்களை பெயரளவில் ஏற்படுத்திக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள நிலையில் அது குறித்து 1–ம் பிரதிவாதியை அணுகி கேட்டேனா? என்றால் கேட்டேன், அதற்கு 1–ம் பிரதிவாதி பொய்யாக வாதிகள் நோட்டீஸ் அனுப்பியுள்ளதாக சொன்னார். அதேபோல், 1–ம் பிரதிவாதி வாதிகளிடம் அவர்கள் வாங்கிய கடனுக்கு ஆதரவாக ஈடு ஆவணமாக எழுதி பெறுவதாக சொல்லிவிட்டு கிரைய ஆவணமாக எழுதி வாங்கி கொண்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அதிக தொகை பெற வேண்டும் என்பதற்காக வேண்டி தான் 1–ம் பிரதிவாதி எங்கள் இருவர் பெயரிலும் பெயரளவில் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3

கிரைய ஆவணங்களை ஏற்படுத்தி கொண்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அதனால், வாதிகள் 1–ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திக்கொடுத்த வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் அவர்களுடைய முழுமன சம்மதத்துடன் எழுதி கொடுக்கவில்லை என்றும், அதனால் அந்த வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் ரத்து செய்யக்கூடியது என்றால் சரியல்ல. அந்த 1–ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பெயரளவிலான வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் பேரில் எங்கள் பெயரில் ஏற்படுத்திக்கொடுத்துள்ள வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 கிரைய ஆவணங்களும் செல்லாது என்றால் சரியல்ல.

4. எங்களுக்கும் 1–ம் பிரதிவாதிக்கும் இடையே எந்தவொரு பணப்பரிமாற்றமும் ஏற்படாத நிலையில் வாதிகளிடம் இருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பெயரளவில் எங்கள் பெயரில் கிரைய ஆவணங்ககை ஏற்படுத்தி கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால், எங்கள் பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணங்களுக்கு எதிராக வாதிகள் தாவாவில் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.18 18:57:45 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**